# சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி

## சீமாட்டி லீலாவதி
நினைவுப் பேருரை

13.10.2000


கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம்



வெளியீடு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கைநெறி

## சீமாட்டி லீலாவதி
### நினைவுப் பேருரை
### 13.10.2000

கலாநிதி.செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி
தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம்

வெளியீடு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | ஜனவரி, 2001 |
| கணனி எழுத்தமைப்பு | : | பதிவாளர் அலுவலகம், யாழ்.பல்கலைக்கழகம். |
| அச்சிடல் | : | பதிவாளர் அலுவலகம், யாழ்.பல்கலைக்கழகம். |


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை © | : | ஆசிரியருக்கு |



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு

**Computer typeset, Printed, Published By Registrar's Office,**
**University of Jaffna.**

# முகவுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மரபுவழி நினைவுப் பேருரைகளின் வரிசையில் இரண்டாயிரமாம் ஆண்டு சீமாட்டி லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரையை கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நிகழ்த்தியுள்ளார்.

இவர் "சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி" எனும் பொருள்பட ஆற்றிய இந்தப்பேருரையானது மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நலமாக வாழ்வதற்கு இன்றியமையாத கல்வியுடன், ஒழுங்கும், கட்டுப்பாடும் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றது என்பதை மிகவும் தெட்டத்தெளிவாக வலியுறுத்துகின்றது. இதிலும் அகத்தொழுங்கு சமயத்தினால் தான் அடையப்பட முடியுமென வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

எனவே எல்லா உயிர்களும் வையத்து வாழ்வாங்கு வாழ வாழ்ந்து காட்டியவர்கள் இராமநாத வள்ளலாரும் அவர்தம் சீமாட்டி லீலாவதியும் என்பதை இன்றைய இளம் சந்ததியினர் உணரவும், அவ்வழி வாழவும் வழிகாட்டியாக அமைந்த இப்பேருரை வருங்கால மக்களும் பயன்பெற சிறந்த படைப்பாக இந்நூல் அமைகின்றது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

# சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கைநெறி

## அறிமுக உரை

சைவப்பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றோடு ஒட்டி எங்கள் கல்வி மேன்மையடைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டவர் இராமநாத வள்ளல் அவர்கள்.

**"திங்கள் சேர் வாண்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே**
**மங்களம்சேர் வாழ்வு பயில் மாண்புடைத்து இக்கல்லூரி"**

இராமநாதன் கல்லூரிக் கீதத்தில் அமைந்த கருத்தமைந்த பாடல்களில் இதுவும் ஒன்றாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய சிறந்த வழிகாட்டல், பொன் இராமநாதன் துரை அவர்களுக்கு கல்விப்பணியும் கடவுட் பணியும் ஆற்றுவதற்கு உதவியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தூய எண்ணமே இராமநாதன் மகளிர் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் தோற்றுவிக்க உதவியது எனலாம்.

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

என்ற குறட்பா அறிவுடையோர் அனைவரதும் சிந்தனைக்கு உரியதாகும். அரிச்சுவடி தொடக்கம் சமய ஒழுக்கமும் பண்பாட்டுப்பிடிப்பும் இணைத்து வளர்க்கப்படும் கல்வியே முழுமையான பயனைத்தருவதாகும். இத்தகைய பயன்பாடு இராமநாதன் மகளிர் கல்லூரியினால் நிறைவேற்றப்பட்டது. பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் மாத்திரம் வேண்டியதை இக்கல்லூரி வழங்கவில்லை. பெண்கள் அனைவரும் சிறந்த குடும்பப்பெண்களாக சைவத்தமிழ்க் கலாச்சாரத்தை வளர்ப்பவர்களாக, தற்காத்து தற்கொண்டாரைப் பேணுபவர்களாக, நன்மக்களைப்

பெற்று நாட்டுக்கு உதவுபவர்களாக விளங்க வேண்டிய உயர்ந்த கல்வியே இக்கல்லூரியில் புகட்டப்பட்டது.

இராமநாத வள்ளலுக்குப் பின்பு இப்பாரம்பரியத்தை தனது கணவனாரின் ஆன்மா பெரிதுவக்கும் நிலையில் கடமையாற்றியவர் லீலாவதி அம்மையார் அவர்கள். இராமநாதன் துரை அவர்களின் ஆத்மீக வாழ்வை மேலும் மலரச் செய்தவரும் இவரே. பெண் மக்களின் உயர்ந்த தியாக வாழ்வுக்கு வழி காட்டிய சிறந்த கல்விப்பணியை முன்வைத்து ஓங்கச்செய்தவரும் அம்மையார் அவர்களே. இவ்வம்மையாரின் நெறிப்படுத்தலின் மூலம் அனைத்து நிகழ்வுகளும் கல்லூரியில் இடம்பெற்றன. "சிவலோகநாதனைக் கண்டு சேவித்துடுவோம் வாரீர்" என்ற பாடல் நடராசப்பெருமானின் திருக் கோவிலில் காலை மாலை தவறாது ஒலிக்கும். புராணபடனம் என்பது தவறாது ஒருமணிநேரம் நடராசர் திருக்கோயிலில் தினமும் நிகழ்ந்து வரும். இங்கு கல்வி பயிலும் மாணவியரின் பாவாடை தாவணி, பூமாலை பொட்டு விபூதி ஒற்றைச்சடை ஆகியவை சிறப்புச் சின்னங்களாகும்.

லீலாவதி சீமாட்டியார் காட்டிய வழியில் கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள் ஒழுங்காக இதனைப் பின்பற்றி வந்தனர். இங்கு கல்வி பயிலும் பெண்பிள்ளைகள் உயர்ந்த தாய்மார்களாகவும் சிறந்த மனையாளராகவும், சைவப் பண்பாட்டுக்குரிய வாழ்கையை மேற்கொள்பவராகவும் விளங்கினார்கள் என்றால் அதற்கு சீமாட்டி லீலாவதி அம்மையாரின் சிறந்த முகாமைத்துவமே என்று கூறினால் மிகையொன்றுமில்லை.

லீலாவதிச்சீமாட்டியாரின் அருளொளுகும் திருவுருவத்தை திருமதி மகேஸ்வரி மகாதேவா அவர்கள் பின்வருமாறு காட்டுகின்றார்.

"கருதரிய கலைகளெலாம் கற்றுணர்ந்தே அன்பெனு நல்லணியும் பூண்டு
பெருமைதரும் பண்பினோடு பெண்மையினம் சிறப்புறவே வாழ்ந்த செல்வி
திருநுதலில் திருநீறும் திருமார்பில் திருவடமும் சேர்ந்தோர் யார்க்கும்
மருவினிய புன்னகையும் மங்காத வெண்கலையும் மறக்கற் பாற்றோ.
அகத்தும் புறத்தும் தூய்மை கொண்டு யாவர்க்கும் அன்னையாய்
அன்பும் அருளும் பொங்க பொறுமையும் பக்தியும் பூண்டு
அன்னார் இக்கல்லூரிக்குச்செய்த அரும்பணி மறக்கற் பாலதன்று"

லீலாவதி அம்மையாரின் உயர்ந்த சேவையைப் பாராட்டி இலங்கைப்பல்கலைக்கழகம் 1942ம் ஆண்டு அவருக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. சீமாட்டி லீலாவதி அம்மையார் தனது வாழ்வின் பெரும் பகுதியை சைவசித்தாந்த நெறியிலே ஞானபாத நிலையிலே வாழ்ந்து அமரரான தகுதியைப் பெற்றவர். இத்தகைய பெருமைகள் பலவற்றைத் தனதாக்கிக் கொண்ட அம்மையாரின் கல்லூரி விடுதியிலிருந்து ஆசிரியர் பயிற்சி பெற்ற அனுபவத்தை எனது வாழ்வில் மகிமையான காலமாகக் கருதுகின்றேன். ஆகவே "சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி" என்ற தலைப்பிலே உரையாற்றுகின்ற வாய்ப்பை இந்நாளில் பெற்றுக் கொள்கிறேன்.

## சைவசித்தாந்தம்

### வாழ்வாங்கு வாழும் நெறி

உலகில் உள்ள எல்லோரும் நலமாக வாழவேண்டுமானால் ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாது வேண்டப்படும். ஒழுங்கு அகத்தொழுங்கு, புறத்தொழுங்கு என இருவகைப்படும். அவற்றில் அகத்தொழுங்கைப் பெறுதல் சமயத்தினால்

பெற்று நாட்டுக்கு உதவுபவர்களாக விளங்க வேண்டிய உயர்ந்த கல்வியே இக்கல்லூரியில் புகட்டப்பட்டது.

இராமநாத வள்ளலுக்குப் பின்பு இப்பாரம்பரியத்தை தனது கணவனாரின் ஆன்மா பெரிதுவக்கும் நிலையில் கடமையாற்றியவர் லீலாவதி அம்மையார் அவர்கள். இராமநாதன் துரை அவர்களின் ஆத்மீக வாழ்வை மேலும் மலரச் செய்தவரும் இவரே. பெண் மக்களின் உயர்ந்த தியாக வாழ்வுக்கு வழி காட்டிய சிறந்த கல்விப்பணியை முன்வைத்து ஓங்கச்செய்தவரும் அம்மையார் அவர்களே. இவ்வம்மையாரின் நெறிப்படுத்தலின் மூலம் அனைத்து நிகழ்வுகளும் கல்லூரியில் இடம்பெற்றன. "சிவலோகநாதனைக் கண்டு சேவித்துடுவோம் வாரீர்" என்ற பாடல் நடராசப்பெருமானின் திருக் கோவிலில் காலை மாலை தவறாது ஒலிக்கும். புராணபடனம் என்பது தவறாது ஒருமணிநேரம் நடராசர் திருக்கோயிலில் தினமும் நிகழ்ந்து வரும். இங்கு கல்வி பயிலும் மாணவியரின் பாவாடை தாவணி, பூமாலை பொட்டு விபூதி ஒற்றைச்சடை ஆகியவை சிறப்புச் சின்னங்களாகும்.

லீலாவதி சீமாட்டியார் காட்டிய வழியில் கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள் ஒழுங்காக இதனைப் பின்பற்றி வந்தனர். இங்கு கல்வி பயிலும் பெண்பிள்ளைகள் உயர்ந்த தாய்மார்களாகவும் சிறந்த மனையாளராகவும், சைவப் பண்பாட்டுக்குரிய வாழ்கையை மேற்கொள்பவராகவும் விளங்கினார்கள் என்றால் அதற்கு சீமாட்டி லீலாவதி அம்மையாரின் சிறந்த முகாமைத்துவமே என்று கூறினால் மிகையொன்று மில்லை.

லீலாவதிச்சீமாட்டியாரின் அருளொழுகும் திருவுருவத்தை திருமதி மகேஸ்வரி மகாதேவா அவர்கள் பின்வருமாறு காட்டுகின்றார்.

சமய வாழ்வு தேவையில்லை" என்று நவீன விஞ்ஞானிகள் கூறலாம். ஆனால் அந்த வாழ்வு படம் இல்லாத சட்டம் போன்று எந்தவித பயனையும் எய்த வைக்காது. உண்மையான சைவவாழ்வு வாழுகின்றவர்களை இன்று விரல் விட்டு எண்ண வேண்டியிருக்கிறது.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை" என்பது வள்ளுவருடைய வாய்மொழி. எனவே அவ்வுலகம் செல்லும் வாழ்க்கையை நாம் இவ்வுலகத்திலேயே பெற்று விட வேண்டும். அதற்கு வழிகாட்டுகின்ற உயர்ந்த நெறியே சைவசித்தாந்தம். இது ஒரேயடியாக எம்மைக் காட்டுக்கு அழைத்துச் செல்வதில்லை. மோட்சத்திலே கொண்டு போய் சேர்ப்பதுமில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து படிப்படியாக மனமாசு அகன்று தூய்மை பெறும் வழியையே காட்டுகின்றது. "சைவமாஞ் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது" என்ற நிலையில் இப்பிறவியையும் சைவ சமய வாழ்வோடு நாம் பெற்றிருக்கிறோம். சிவஞான சித்தியாரில் இந்த உயர்வு காட்டப்படுகின்றது.

"புறச்சமயநெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழி உழன்றும் புகலும் ஆச்சிரம
அறத்துறைகள்அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதிற் சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்."

இதனால் வேற்றுச் சமயங்களும் சைவத்துக்குப் புறம்பல்ல என்பதும் சைவநெறியை அடைதற்கு படிகளாக அமைந்துள்ளன என்பதும் விளங்கக் கிடக்கின்றது. புறச்சமயத்தை வேறு படுத்தாது தழுவிக் கொள்ளும் தனிப்பண்பு சைவம் ஒன்றுக்கே உண்டு என்பது சிறப்பம்சமாகும். ஆனால் இதைப்பற்றிப் பெருமை பேசிக் கொண்டிருப்பது எமது கடமை அன்று. மேலும்

மேலும் உயர்ந்து செல்ல உறுதி பயக்கும் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதே நமது பெருங்கடமையாகும்.

## புண்ணிய பூமியில் பிறத்தல்

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினும் அரிது அரிது காண்" என்பது தாயுமான சுவாமிகளின் அருள்வாக்காகும். மக்கட்பிறப்பு என்பது ஏனைய அனைத்துப்பிறப்பிலும் உயர்வானது. தான் எடுத்த மனிதப் பிறவியை ஏனைய பிறவிகளிடமிருந்து வேறுபடுத்துகிறார் மணிவாசகப் பெருமான். அதாவது,

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய் தேவராய்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என்று பாடி தனது உய்வு நிலையை மேலும் காட்டுகிறார். அதாவது மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்று பெருமிதமாகப் பேசுகின்றார். மானிடப் பிறப்பை எடுப்பவர்களும் வேதாகம விளக்கம் வாய்ந்த புண்ணிய பூமியில் பிறக்கும் பேற்றை அடைவது மேலும் சிறப்பாகும்.

மாநுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
தானிடத் தைந்து மாடு மரன்பணிக்காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலு மூமரொன்றையு முணரா ரந்தோ.

சிவஞானசித்தியாரில் இடம்பெற்ற இப்பாடல் மூலம் அருணந்தி சிவாச்சாரியார் மேற்காட்டிய

பெருமையை விளக்குகின்றார். வேதம் என்பது வைதீக சமயத்தில் பொதுநூலாகக் கொள்ளப்படுகின்றது. ஆகமம் என்பது சைவசமயத்தின் சிறப்பு நூலாகக் கருதப்படும். அனைவர்க்கும் உரியது வேதம். சத்திநிபாதருக்கு உரியது ஆகமம். சிவசக்தி ஆன்மாவில் பதிந்தவர்களையே சத்திநிபாதர் என்று அழைப்பர். ஞானசம்பந்தப் பெருமானுடைய அவதாரத்தைக் குறிப்பிட்ட சேக்கிழார் சுவாமிகள்.

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலிய
புனிதவாய் மலர்ந்தழுத
சீத வளவயற் புகலித்
திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.

வைதீக சமயத்தில் இடம்பெறும் சைவநெறி மிகவும் மேலானது. இதனாலேயே "மிகுசைவத்துறை" என்று குறிப்பிடுவது எமது கவனத்துக்குரியது. வேதம் என்பதை ஒரு மரமாக வைத்துக் கொண்டால் இலை, தளிர், அரும்பு, பூ, பிஞ்சு, காய் அனைத்தையும் தாங்கி நிற்பது அதுவே. குமரகுருபர சுவாமிகளின் வாக்கிலே இது சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆனால் "சிவாகமம்" என்பது அம்மரத்தில் கனிந்த கனியாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அந்தக் கனியில் இடம் பெறும் கோதும் விதையும் அகச்சமயங்கள் ஆகவும் கனியைப் பிழிந்து எடுத்த சாறு சைவ சித்தாந்தமாகவும் குமரகுரபர சுவாமிகள் எடுத்துக் காட்டுகின்றார்.

"ஓரும் வேதாந்தம் என்று உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங்கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே."

என்பது அவர் பாடல். உயிர்கள் உய்வடையும் பொருட்டு சுத்தமாயை என்ற வயலில் அருள் என்கின்ற விதையை விதைத்து இரக்கமாகிய நீரைப் பாய்ச்சி வேதம் என்னும் மரத்தினை இறைவன் வளர்த்தான். அம்மரத்தினால் உண்டான பலன்களோ பலவாகும். அவற்றுள் சிலர் இலைகளைப் பறித்து மகிழ்ந்தனர். வேறு சிலர் தளிர்களைப் பறித்து மகிழ்ந்தனர். மற்றும் சிலர் தமது தகுதிகளுக்கேற்ப அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்பவற்றைப் பறித்து மகிழ்ந்தனர். இந்த நிலையில் வேதமாகிய மரத்தின் வேதாந்தம் என்னும் உச்சியிற் பழுத்த அருங்கனியைப் பிழிந்து அதன் சாரமான சைவசித்தாந்தம் என்னும் தேனமுதத்தினை உண்ணும் பேற்றினைப் பெற்றவர் மிகச்சிலரே.

## சைவசித்தாந்தத்தின் அடிப்படை

சைவசித்தாந்தத்தின் அடிப்படையான கொள்கை ஒன்றேயாகும். அதாவது ஆதியும் அந்தமும் இல்லாத முழுமுதற் பொருளாக விளங்குகின்ற பதியும், தன்னை இயல்பாகப் பிணித்துள்ள பாசத்திலிருந்து நீங்குவதற்கு திருவருளைத் துணையாகக் கொள்ளும் பசுவும், வினை காரணமாக உயிரைப் பிடித்து நிற்கும் பாசமும் முப்பொருள்கள் என்று காட்டப்படுகின்றது. உயிரைப் பற்றி நிற்கும் பாசத்திலிருந்து விடுபடுவதற்கு திருவருளைத் துணையாகக் கொள்வதும் முத்தி நிலையில் திருவடியே தஞ்சமாகப் பேரின்ப வாழ்வில் திளைத்திருத்தலும் சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும். இதுவே வீடு பேறு என்பது. இதனைப் பின்பற்றி வாழ்பவர்கள் சித்தாந்த சைவர் என்று பேசப்படுபவர்.

"என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமும் என்னை
உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசம் என்றான் இம்மூன்றும்
ஆராய்ந்தவர் முத்தராம்."

இயல்பான அறிவுடைப் பொருளே பதி என்றும், அறிவிக்க அறிபவை பசு என்றும், அறிவித்தும் அறிய முடியாதவை பாசம் என்றும் பேசப்படும். இந்தப் பாசத்தினின்றும் நீங்கி ஆன்மாவானது பதியை அடைவதே பேரானந்த நிலையாகும்.

இறைவன் மானிடப் பிறவியை எமக்குத் தந்தது அவனை அடைந்து முத்திபெறுவதற்கே ஆகும். இந்த நோக்கம் நிறைவேறும் வகையில் வாழ்வதே சைவ சித்தாந்த மார்க்கமாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் இம்மார்க்கத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதுவே வழிபாட்டு நெறிக்கு எம்மை ஆளாக்குகிறது. தோத்திர சாத்திரங்கள் இதனை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. தாயுமான சுவாமிகள் ஒரு பாடலிலே மேலும் சிறப்பாக பக்குவம் உள்ள ஆன்மாக்களை அழைத்துப் பாடுகின்றார்.

"காகம் உறவு கலந்து உண்ணக்கண்டீர்
அகண்டாகார சிவபோகமெனும் பேரின்பவெள்ளம்
பொங்கித்ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குது
ஐயோ இன்புற்றிட இனி நாம் எடுத்த தேகம் விழுமுன்
புசிப்பதற்கு சேர வாரும் செகத்தீரே."

என்பது சுவாமிகளின் அன்பு அழைப்பாகும். சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகள் மிகப் பழமையானவை என்பதை மொகஞ்சோதரோ, ஹரப்பா நாகரீகமே காட்டுகிறது. முழுமையாக நோக்கினால் அருளாளர்கள் கண்ட ஞானத்தொகுதியே சைவசித்தாந்தம் என்று சுருக்கமாகக் கூறி விடலாம். இவை எக்காலத்தும் மாறுபடாத இயல்பை உடையன.

## முப்பொருள் இலக்கணம்

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களாவன பதி, பசு, பாசம் என்பவையாகும். இறைவன் படைப்பில் உள்ள அனைத்தையும், படைத்த இறைவனையும் இம்மூன்றுக்குள் அடக்கி விடலாம். எண் குணங்களோடு

கூடியவன் பதி எனப் பேசப் படுகின்றான். இக்குணங்கள் யாவும் மாயா குணங்களிலிருந்து வேறுபட்டவை. அருட்குணங்கள் என்று பிரித்து நோக்கக் கூடியவை. இந்த எட்டுக்குணங்களையுடைய இறைவனே உலகத்துக்கு முழுமுதல் நாயகனாக விளங்குகின்றான். அது மாத்திரமன்றி உயிர்த் தலைவராகவும் பேசப்படுகின்றான்.

**"எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகம்**
**தங்கும் அவன் தாளே தனி"**

என்று திருவருட்பயன் பதிமுது நிலையில் காட்டுகின்றது. நிமித்த காரணமாகிய இறைவனும் முதற்காரணமாகிய மாயையும் துணைக்காரணமாகிய சக்தியும் உலக இயக்கத்துக்குக் காரணமாகின்றது. பதியானது சக்தியைத் துணையாகக் கொண்டு மாயாகாரியமாகிய உலகைப் படைக்கிறது. ஒரு பாத்திரத்தை உண்டாக்குவதற்கு மண் முதற் காரணமாகவும், சக்கரம் துணைக்காரணமாகவும், குயவன் நிமித்த காரணமாகவும் அமைவதை உதாரணமாகக் குறிப்பிடலாம். பதியானது அருவம் உருவம், அருவுருவம் என்ற நிலையில் ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்றுக் கொள்கிறது. சிவம், சக்தி, நாதம், விந்து என்ற நான்கு நிலையிலும் இறைவனை உள்ளத்தினால் வழிபடுதல் அருவ வழிபாடாகும். அருவுருவ வழிபாடென்பது சிவலிங்க வழிபாடாகும். அதாவது கண்ணால் கண்டு மாத்திரம் வழிபடுவதாகும். உருவ வழிபாடென்பது காண்பதோடு உருவங்களை பகுத்து நோக்குவதற்குரியதாகும். இவற்றையே மகேஸ்வர மூர்த்தம் என்று கூறுவர். இவற்றின் இறுதியாகப் பேசப்படும் மூர்த்தமே நடராச மூர்த்தமாகும்.

**"அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம் உருவும்**
**உடையான் உளன்"**

என்று திருவருட்பயன் பேசுகின்றது.

என்றும் உள்ள மற்றொரு பொருளாக பசுவாகிய ஆன்மாக்கள் காட்டப்படுகின்றனர். ஆன்மாக்கள் எண்ணில்லாதவை. செம்பிற்களிம்பு போல் இவற்றோடு ஒட்டி நிற்கும் ஆணவத்தை நீக்குவதற்காக தனுகரணபுவன போகமாகிய மாயை உயிர்களோடு ஒட்டிக்கொள்ளும். இறைவன் இவற்றுக்கு உடம்பைக் கொடுக்கின்றான். உடம்பை எடுத்த ஆன்மாக்கள் இன்ப துன்பங்களை அனுபவித்து நல்வினை தீவினையின் மூலம் முடிவில் சிவப்பேற்றினை அடைவதற்குரிய மார்க்கத்திதை எய்துகிறது. இந்த ஆன்மாவானது பெத்த நிலையில் மும்மலங்களைப் பற்றிக் கொண்டும், முத்தி நிலையில் அவற்றினின்றும் விடுபட்டும் காட்சி தருகின்றது. உலகத்தைச் சார்ந்திருப்பதினாலும் முடிவிலே கடவுளைச் சார்ந்திருப்பதாலும் சதசத்து என்ற பெயரைப் பெறுகின்றது. அதாவது சத்தாகிய பதியையும் அசத்தாகிய உலகத்தையும் சார்ந்திருக்கும் இயல்பு இதற்கு உண்டு என்பது கருத்தாகும்.

அடுத்து பாசம் என்பதைக் கவனிப்போம். செம்பிலே களிம்பு சேர்ந்திருப்பது போல உயிரில் ஆணவம் என்ற களிம்பு இணைந்துள்ளது. இதுவும் பசுவைப்போல அனாதியானது. அதாவது முத்தி நிலையிலும் ஆன்மாவை விட்டு விலகி நிற்குமே அல்லாமல் முற்றாக அழிந்து விடாது. ஆனால் ஆணவத்தின் செயல்களுக்கு கன்மமும் மாயையும் உதவும். கன்மம் என்பது வினை. இது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூன்று வகையின. பழவினை-சஞ்சிதம், அனுபவிக்கும்வினை-பிராரத்துவம் , புதுவினை-ஆகாமியம் என்பது திருவருள் என்ற ஞான அக்கினியால் எரிக்கப்பட்டு வறுத்த வித்துப்போல் ஆகிய போது இருவினை பெயர்ப்பு ஏற்படும். முத்தி நிலை வரையும் விடியும் வரை எரிகின்ற விளக்குப் போல ஓரளவுக்கு உயிரை விளக்கி நிற்கும் தன்மையும் மாயை என்ற மலத்துக்கு உண்டு.

**"விடிவாமளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து"**
என்பது திருவருட்பயன்.

## ஆணவமலம்

மூவகை மலங்களில் ஆணவ மலத்தை மூலமலம் என்றும் இருள்மலம் என்றும் குறிப்பிடுவர். இது நான், எனது என்ற அகப்பற்று புறப்பற்றுக்களை ஆன்மாவுக்கு உண்டாக்கி விடும். மேலும் மேலும் வினைகளைச் செய்யத் தூண்டுவதும் ஆணவமலமே. பழைய வினைகளுக்குத் தக்கதாகவே இறைவன் தனு கரண புவன போகங்களைத் தருகிறான். இவைகள் மாயா காரியங்களாகும். ஆன்மாவிலிருந்து ஆணவத்தை அடக்க வேண்டுமானால் இறைவனை பற்றுக் கோடாகக் கொள்ள வேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்பது திருக்குறள். உதாரணமாக ஒரு விறகுக்கட்டுக்கு இரண்டு பக்கமும் இறுக்கி இரண்டு கட்டுகளைப் போட்டு விடலாம். ஆனால் ஒரு கட்டை மேலும் இறுக்க மறுகட்டு தளரும். இதே போன்று உலகப் பற்றுக்களாகிய கட்டுக்களை நீக்க தெய்வப்பற்று இறுகி மேலெழுந்து நிற்கும். அநாதியாகவே உயிர்களின் அறிவை ஏதோ ஒரு பொருள் மறைத்து நிற்க வேண்டும் என்பது உண்மை. திருவருள் துணை நிற்கும் பொழுது உயிர் படிப்படியாக அறிவைப் பெறுகிறது. உயிர்களை மறைத்து நிற்கும் அந்தப் பொருளே ஆணவம் எனப்படுவது. இது சடப்பொருள். அறிவற்றது. இருள் போன்ற மறைப்பை ஆன்மாவுக்கு இது கொடுக்கின்றது.

**"ஒரு பொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாதிது."**

இருளானது மற்றவற்றை மறைத்தாலும் தன்னைக் காட்டி நிற்கும். ஆனால் ஆணவமானது தன்னையும் காட்டாது. பிற பொருளையும் காட்டாது என்பது இதன் பொருளாகும். உயிர்களின் அறிவை மறைக்கின்ற

இச்சடப்பொருள் அநாதியாகவே ஆன்மாவோடு ஒன்றி நிற்கிறது. ஆணவ மறைப்பை நீக்க வேண்டுமென்பதற்காகவே ஆன்மாக்களுக்குப் பிறவிகள் கொடுக்கப்படுகின்றது. இப்பிறவிகளின் மூலம் இன்ப துன்பங்களை அனுபவிப்பதும் முடிவில் இருவினை ஒப்பு ஏற்பட்டு மலபரிபாகம் அடைந்து ஆன்மா திருவருள் வசப்பட்டு நிற்கும் பொழுது ஆணவம் வலிகெட்டு ஆன்மாவோடு இணைந்து நிற்கும் என்பதும் நாம் கூர்ந்து கவனிப்பதற்குரியது. ஆணவ மலம் இறைவன் அறிவை மறைக்க முடியாதது. ஆனால் உயிர்களின் அறிவை மாத்திரம் மறைத்து நிற்கும். முடிவில் இது வலிகெட்டு நிற்கும் நிலையே மலபரிபாகம் என்பது.

## நான்கு பாதங்கள்

மனம் ஒரு குரங்கு. அது ஏதேனும் ஒரு மரக்கொப்பையே பற்றி வாழும் தன்மையது. அதே போன்று உலகப் பற்றுக் கோடுகளிலிருந்து நீங்குவதற்கு குரங்கின் நிலையிலிருந்த ஆன்மா உபாயம் தேடுதல் வேண்டும். அந்த உபாயங்களே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று பேசப்படுகின்ற நாற்பாதங்களாகும். இவற்றை சிவாகமங்கள் தெளிவாக விளக்குகின்றன. முதலாவது சரியை என்பது ஒரு எயமானுக்கு வேலைக்கரன் என்னென்ன உபசாரம் செய்வானோ அவ்விதமாக இறைவனை நோக்கிச் செய்யும் பணிகளாகும். இத்தகைய தொண்டுகளைச் செய்கின்ற பொழுது பற்றுக்கள் ஏற்படுவதற்கு இடமில்லை. அப்பர் சுவாமிகளின் அருள்வாழ்க்கை இதற்கொரு எடுத்துக்காட்டாகும். எண்பத்தியொரு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து இறுதிவரை சரியைத் தொண்டுகள் ஆற்றி இறைவனடி சேர்ந்தவர் அப்பர் சுவாமிகள்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."

அப்பர் சுவாமிகளின் வாழ்வு தாசமார்க்கம் பற்றியதாகும். தாசன் என்பது அடிமை நிலையைக் குறித்து நிற்பது. இவர்கள் அடையும் முத்தி சாலோகம் என்று பேசப்படும். அதாவது இறை உலகத்தில் வாழுகின்ற பேற்றை ஆன்மா அடைந்து நிற்பதாகும். அடுத்ததாக கிரியை என்பது பற்றி நோக்குவோம். சரியை வழிபாட்டை புறவழிபாடு என்று பேசப்படுவது போல் கிரியை வழிபாடு அகம், புறம் என்ற இரண்டும் சேர்ந்த வழிபாடு ஆகும். இவ்வழிபாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஆகும். ஒரு வடிவத்திலே வைத்து இறைவனைப் பூசிப்பதும் அபிஷேகம் முதலிய பதினாறு உபசாரங்களைச் செய்வதும், அக்கினி வளர்த்து யாக வேள்வி ஆற்றுவதும் கிரியாபாதத்தில் அடங்குவன ஆகும். இதனைச் சற்புத்திர மார்க்கம் என்பர். இம்மார்க்கத்தில் நிற்போர் அடைகின்ற முத்தி சாமீபம் என்று சொல்லப்படும். அதாவது இறைவனுக்குப் பக்கத்திலே இருத்தல் என்பது இதன் கருத்தாகும். யோகமார்க்கம் என்பது இறைவனை அகவழிபாட்டில் கண்டு பூசித்தலாகும். இதனை சக மார்க்கம் என்று சொல்லுவர். அதாவது தோழமை என்று தொடர்பு கொள்ளலாகும். சுந்தரமூர்த்தி நாயனாருடைய வாழ்ககை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இவர்கள் அடைய இருக்கும் முத்தி சாரூப முத்தியாகும். அதாவது இறைவனோடு இருத்தல் என்பது இதனால் காட்டப்படுகின்றது.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு, மலர், காய், கனி என்று"

என்று வர்ணிக்கிறார் தாயுமான சுவாமிகள். ஞான பாதத்தில் நிற்போர் அடைகின்ற முத்தி சாயுச்சிய

முத்தியாகும். மணிவாசகப் பெருமான் சாயுச்சிய முத்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஞானபாதவிளக்கம், தசகாரியம்

சிவஞானபோதத்தில் எட்டாம் சூத்திரம் முதல் பதினோராம் சூத்திரம் வரை இவற்றின் விளக்கம் பேசப்படுகிறது. சாதனம், பயன் ஆகிய இரு பகுதிகள் ஞானபாதத்தில் விளக்கப்படுகின்றது. ஆன்மாவானது இதற்கான பக்குவத்தை அடைய இருக்கின்ற பத்து அவதாரங்களை தசகாரியம் என்று கூறுவர். அவையாவன தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, பரரூபம், பரதரிசனம், பரயோகம், பரபோகம் என்னும் பத்துமாகும். நிலம் முதல் நாதம் ஈறான முப்பத்தாறு தத்துவங்களையும் ஆன்மா தனக்கு வேறாகக் காணும் நிலை தத்துவரூபம் ஆகும். இவை மாயாகாரியங்கள் என்று தன் அறிவிலே காண்பது தத்துவ தரிசனம் ஆகும். சுட்டறிவை நீக்கி எங்கும் நிறைவாய் நித்தியமாய் அறிகின்ற நிலையை அறிவது தத்துவசுத்தி ஆகும். தன்னறிவு கொண்டு அறிந்ததாக இல்லாமல் சிவனருளாலே அறிந்ததாக உணர்வது ஆன்மரூபம், ஆன்மதரிசனம் ஆகும். ஆன்மா அருள்வயப்பட்டு நிற்றல் ஆன்மசுத்தி ஆகும். இவற்றை சிவப்பிரகாச நூலில் பின்வருமாறு காட்டுகின்றார்.

**"தேசுற மருவும் ஆன்ம தெரிசனம், ஆன்ம சுத்தி**
**ஆசிலா ஆன்மலாபம் ஆகமூன்றாகும் மூன்றும்**
**பாசம தகல ஞானம் பற்றல், தான் பணியை நீத்தல்**
**ஏசில்நே யத்த ழுந்தல் எனும் இவற்றடங்கு மன்றே."**

இறுதி நான்கு தரிசனங்களும் ஆன்மா இறைவனை அனுபவித்து நினைக்கும் நிலையாகும். ஆன்மா சுத்தியடைந்த பின்பு ஞானத்திற்கு முதலாகிய நேயம் தோன்றும். இதன் பயனாக தன்செயலற்று தான் அற்று ஆன்மா சிவத்திினோடு ஏகனாகி நிற்கும் இதுவரையும் உள்நின்று உணர்த்திய இறைவன்

குருவடிவாக வந்து ஆன்மாவிற்கு பதி, பசு, பாசம் ஞானங்களை உணர்த்துவார். திருவிடை மருதூர் மும் மணிக்கோவையில் இந்நிலை உணர்த்தப்படுகிறது. பட்டினத்துப் பிள்ளையின் திருவாக்கில் அதனைக் காண்போம்.

**"மங்கை பங்க! கங்கை நாயக! நின்**
**தெய்வத்திருவருள் கைவந்து கிடைத்தலின்**
**மாயப்படலங் கீறித் தூய**
**ஞானநாட்டம் பெற்றபின் யானும்**
**நின்பெருந் தன்மையுங் கண்டேன், காண்டலும்**
**என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன்**
**நின்னிலை அனைத்தையும் கண்டேன், என்னை?**
**நின்னைக் காணா மாந்தர்**
**தன்னையுங் காணாத் தன்மையோரே."**

## திருவருள் குருவருளாக வருதல்

ஞானசாரியார் மூலமே ஆன்மா ஞானத்தைப் பெற முடியும் என்பதும் அவரிடமிருந்து பெறுகின்ற கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் ஆகியவற்றோடு திருவைந்தெழுத்தின் பெருமையையும் இப்பகுதியிலே இடம்பெறுகின்றது. பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவாக வந்து ஞானத்தை உணர்த்துவான் என்பது சைவ சித்தாந்தத்தின் உண்மையான கருத்தாகும். இதனை அரச புத்திரன் ஒருவன் வேடர் கூட்டத்துடன் வாழ்ந்து வருகிறான். தான் யாரென்பது அரசகுமாரனுக்கு தெரியாது. ஆனால் மகன் பக்குவமடைந்த பின்பு அரசன் வந்து தனது குமாரனை வேடர்களிடமிருந்து மீட்டுச்செல்கிறான். அதாவது ஐம்புலனாகிய வேடர்களிலிருந்து உயிரை மீட்டுக் கொள்வது இவ்வாறே ஆகும்.

**"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி**
**வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்**
**பின் அவனும் என்மகன் நீ என்று அவரிற் பிரித்துப்**
**பெருமையோடும் தானாக்கிப் பேணுமாபோல்**

**துன்னிய ஐம்புல வேடர் சூழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை
மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடிக் கீழ் வைப்பான்."**

சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தில் இவ்வுண்மையை விளக்கப்படுகின்றது. இறைவன் குருவடிவாக வந்து பக்குவமுள்ள ஆன்மாவிற்கு ஞானநிலையை உணர்த்தி நிற்கும் சிறப்பும் இதற்குக் காரணம். ஆன்மாவானது சரியை, கிரியை, யோகப் படிகளில் உயர்ந்து விட்ட தன்மையையும் இவ்வுணர்த்துதலின் காரணமாக ஆன்மாவானது அரண் கழலைப் பற்றி நிற்க காரணம் ஏற்படுகின்றது என்பதும் புலனாகின்றது.

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்நதெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்ந்துவிட்
டன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே"**

இவ்வாறு திருவடி ஞானத்தைப்பெற்ற உயிர் மீண்டும் பெத்த நிலைக்கு மீளாதவாறு ஐந்தெழுத்துப் பயிற்சியை ஏற்படுத்துவதன் அவசியம் ஒன்பதாம் சூத்திரத்தில் காட்டப்படுகின்றது. எட்டாம் சூத்திரத்தில் தம்முதல் என்பது இறைவனைக் குறித்து நிற்பது. இறைவன் குருவடிவாக வந்து பக்குவமுள்ள ஆன்மாவை ஆட்கொள்ளும் தன்மையை திருவாசகம் உணர்த்துகின்றது.

**"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி"**

என்பது சிவபுராணம். தனக்குக் கிடைத்த அருட்பேற்றை குறித்து மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் என்று பெருமிதமாகப் பேசுகின்றார். மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி உயர்ந்து நிற்கும் இந்நிலையிலிருந்து வழுவாமல் இருப்பதற்கு பஞ்ஞாட்சரம் என்னும் திருவைந்தெழுத்து வழி

காட்டுகின்றது. பசு ஞானத்தாலும் பாச ஞானத்தாலும்அறிய முடியாத இறைவனை பதி ஞானம் ஒன்றினாலே அறிய முடியும் என்பதும் இது இந்தநிலை நிலைபெறும் பொருட்டு திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதவேண்டும் என்பதும் இதனால் ஆன்ம சுத்தி ஏற்படும் என்பதும் காட்டப்படுகின்றது.

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராய்த்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண் நிழலாம்பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே."

இதனால் பஞ்சாட்சர ஜெபம் சிறந்த சாதனம் என்பதை உணர முடிகின்றது.

## ஏகனாகி இறைபணி நிற்றல்

சிவஞானபோதத்தின் நான்காவது பகுதி "பயன்" என்ற பிரிவில் ஆன்மா அடையும் பேரின்ப நிலையை உணர்த்துகின்றது. சைவசித்தாந்தம் கூறும் உயர்ந்த நிலை வீடு பேறு என்பதாகும். வீடு என்பது விடு என்ற கருத்தையும் பேறு என்பது பெறு என்ற கருத்தையும் உணர்த்தி நிற்பன. அதாவது பாசநீக்கமும் சிவப்பேறும் இதனால் அறியக் கிடக்கின்றது. அதாவது பத்தாம் சூத்திரத்தால் பாசநீக்கம் காட்டப்படுகின்றது.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்றே."

ஆன்மாக்களின் செயல் எல்லாம் அவன் செயலே என்று நினைத்தலோடு நான் எனது என்ற நிலையும் நீங்கி முற்றாக இறைபணியிலேயே சலியாது நிற்றலை இப்பகுதி காட்டுகிறது. ஆன்மாவின் உண்மையான குறிக்கோளை அடைவதற்கு இந்நிலை வேண்டற்பாலதாகும். இந்நிலையில் மாயா காரியங்களும் கன்மமும் ஆன்மாவைத் தாக்க முடியாது.

## சிவப்பேறு

அடுத்து பதினோராம் சூத்திரத்தில் இறைவனது திருவடிகளை அணைந்து நிற்கும் முழுமையான பயன் உணர்த்தப்படுகின்றது. சிவப்பேறு அடையும் நிட்டை நிலை இச்சூத்திரத்தால் உணர்த்தப்படுகின்றது. பசு ஞானம் நீங்கி பதி ஞானம் பெற்று ஆன்மா இறைவனோடு ஒன்றித்து அவன் திருவடி நிழலில் அணைந்து நிற்கும் இயல்பு இங்கு காட்டப்படுகின்றது. ஒரு பொருளைக் காட்டும் பொழுது காணும் ஆன்மாவும் காட்டும் கண்ணும் ஒருங்கிணைந்து நிற்பது போல முதல்வனோடும் ஒருங்கிணைந்த ஆன்மாவானது அத்துவித நிலையை எய்தி நிற்கும் என்பது இச்சூத்திரத்தின் பொருளாகும். இதனையே அத்துவித நிலை என்று சைவசித்தாந்தம் எடுத்துக்காட்டுகின்றது. அதாவது ஒன்றுமல்லாது இரண்டுமல்லாது பதியோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையாகும். அதாவது காணும் உபகாரம், காட்டும் உபகாரம் இரண்டையும் ஒரே தன்மைத்தாய் நின்று இறைவனே அருள்வான் என்பது குறிப்பிடத்தக்கது. சைவ சித்ததந்தத்தின் முடிந்த முடிபு இதுவே ஆகும்.

## சீவன் முத்தர்நிலை

இந்த நிலையை அடைந்த சீவன்முத்தர்களுக்கு சிலசமயத்தில் அறிவு, இச்சை செயல்கள் மேலும் மாறுபடாதபடி இருக்கும் வண்ணம் சிவனடியார்களையும், சிவாலயங்களையும் சிவனாகவே மதித்து வழிபட வேண்டும் என்பது இச்சூத்திரத்தால் உணரக் கிடக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டான இலக்கியமாக விளங்குவது திருத்தொண்டர் பெரிய புராணம் ஆகும். சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்தை முதலில் கவனிப்போம்.

**"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே."

செங்கமலமலர் போன்று விரிந்து விளங்கும் இறைவனது திருவடிகளை அணையவிடாது தடுத்து நிற்கும் மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி மெய்ஞ்ஞானிகளோடு கூடி வாழுகின்ற தன்மையால் சிவனடியார் வேடத்தையும் சிவாலயங்களையும் இறைவனே என்று கண்டு வழிபட்டு வாழுதல் சீவன் முத்தர்களின் கடனாகும். அதாவது சிவப்பேறு கைவரப் பெற்றவர்கள் மீண்டும் வழுக்கி விழாமலிருப்பதற்கு குருலிங்க சங்கம வழிபாடு இன்றியமையாதது என்பதை இச்சூத்திரம் எடுத்துக் காட்டுகின்றது. உடம்பு நீங்கிய பின் அனுபவிப்பதான முத்தி இன்பத்தை உடம்பு உள்ள பொழுதே அனுபவிப்பவர்கள் தான் சீவன் முத்தர்கள் எனப்படுபவர்கள். சீவன் முத்தர்கள் என்போர் தமது உடம்பு விடுபடும் வரையும் சில கடமைக்குட்பவர்கள். அதாவது சிவனடியார்களைப் பேணல், சிவாலய தரிசனம், சிவவழிபாடு என்பவற்றைக் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் இவர்கள். சேக்கிழார் சுவாமிகள் சீவன் முத்தர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது பின்வருமாறு கூறுகின்றார்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."

என்பது பெரிய புராணப்பாடலாகும். சீவன் முத்தர் நிலையைச் சிறப்பாக இது எடுத்துக் காட்டுகிறது. இதுவரை கூறியவற்றால் சைவசித்தாந்தம் கூறும் வாழ்க்கையின் குறிக்கோள் இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரின்ப நிலையடைதல் என்பதை அறிய முடிந்தது.

## தொகுப்புரை

சைவசித்தாந்தம் என்பது ஒரு ஒப்பற்ற உயர்ந்த வாழ்க்கை நெறி என்பதும் இதனை தனது வாழ்வில் பின்பற்றி வாழ்ந்தவர் சீமாட்டி லீலாவதி அம்மையார் என்பதும் கட்டுரையின் முதலே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்து மக்களாகப் பிறந்த நாம் வாழ்வாங்கு வாழும் நெறியை அறிந்து பின்பற்ற வேண்டும் என்பதையும் சைவமாஞ் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது என்பதையும் அறிய முடிகின்றது. மேலும் நாம் அவதரித்து வாழுகின்ற இந்தப்பூமி புண்ணிய வசப்பட்டது. சமயகுரவர்கள், ஞானிகள், தவசிரேஷ்டர்கள் ஆகியோரால் ஆசீர்வதிக்கப்பட்ட மண் இது என்பதையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்து சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நோக்கும், இதனால் நற்பேறடைய இருக்கும் மானிடப் பிறவியின் மகத்துவமும் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்து சைவ சித்தாந்தத்தில் எடுத்து விளக்கப்படும் பதி, பசு, பாசம் ஆகியவற்றையும் அறிவிக்காமல் அறிவது பதி என்பதும், அறிவிக்க அறிவது பசு என்பதும், அறிவித்தாலும் அறிய முடியாதது பாசம் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த முதல் நூலாகிய சிவஞானபோதத்தைப் பின்பற்றி முப்பொருள் விளக்கம் காட்டப்பட்டுள்ளது. கட்டுரையின் இன்றியமையாத பகுதியாக விளங்குகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை அடுத்தபடியாகக் காட்டி இருவினைஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகியவற்றை ஆன்மா அடைவதற்கு மேற்கொள்ள இருக்கும் ஞான பாதத்தின் விளக்கமும் இதற்காக திருவருள் குருவருளாக வந்து ஆன்மாவை ஆட்கொள்ளும் மகிமையும் உணர்த்தப்படுகின்றது. அதாவது மன்னவன் மகன் எதிர் பாராத விதத்தில் வேடர் கூட்டத்துடன் வளர்ந்து வருவதும் நல்லுணர்வு கைவரப் பெற்றபின் தனது தந்தையாகிய மன்னவனையே தனக்குரியவன் என்று உணர்வதும் இப்பகுதியிலே காட்டப்பட்டுள்ளது. இந்தநிலை உறுதியாகும் பொருட்டு பஞ்சாட்சரஜெபம் எவ்வாறு ஆன்மாவைத் தூய்மைப் படுத்துகின்றது என்பதையும் உணர முடிகின்றது.

பூரணமாக ஏகனாகி இறைபணி நிற்கும் ஆன்மாவின் சிவப்பேறு பற்றிக் காட்டப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறியில் அருள் வழிகாட்டிகளாக இருப்பவர்கள் சீவன்முத்தர்கள். இவர்கள் இறை நிலையில் வைத்து வழிபடத்தக்கவர்கள். எனவே இவர்களின் சிவவேடத்தையும் மற்றும் சிவாலயங்களையும் சிவனெனவே நினைத்து வழிபட வேண்டும் என்பது பூர்த்தியாகக் காட்டப்பட்டுள்ளது.

## மேற்கோள்காட்டிய நூல்கள்

1. அப்பர் சுவாமிகள் தேவாரம்.
2. திருவாசகம்.
3. பெரியபுராணம்.
4. திருமந்திரம்.
5. சிவஞானபோதம்.
6. சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம்.
7. திருவருட்பயன்
8. பண்டார மும்மணிக்கோவை
9. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
10. திருக்குறள்.
11. சைவசித்தாந்த மகாசமாசக் கட்டுரைகள்.



யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை எனும் கிராமத்தில் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 1925.01.07 ம் திகதி பிறந்தார். இவர் மல்லாகம் அமெரிக்க மிசன் பாடசாலை, விசாலாட்சி வித்தியாசாலை, அளவெட்டி சதானந்தா வித்தியாசாலைகளில் தொடக்கக் கல்வியையும், சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் பயின்றார்.

இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியிலும், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் நடாத்திய பண்டிதர் தேர்விலும் சைவ சித்தாந்த சமாஷம் நடாத்திய சைவப்புலவர் தேர்விலும் சித்தி பெற்றார்.

பண்டிதையாகவும், சைவப்புலவராகவும், ஆசிரியராகவும், சைவசமய பிரசாரகராகவும் திகழ்ந்த இவரினது ஆளுமை, சொல்லாட்சி, முகாமைத்துவ வாண்மை என்பவற்றை தன்னகத்தே ஈர்ந்த தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம் தனது அறங்காவற் பணியை அம்மையாரிடம் கையளித்தது. துர்க்கை அம்மன் பக்தர்களுக்கும், அன்பர்களுக்கும் அருள் வாரி வழங்கிய வண்ணம் அருட்கடாட்சத்துடன் மிளிர்கின்றாள் என்றால் அவளின் மறுவடிவம் துர்க்கா துரந்தரியே. சமூக வளர்ச்சிக்கு வழிகோலிய அவரது ஆளுமை ஆற்றலானது ஆலய அறங்காவற் பணியுடன் நின்று விடவில்லை. சிறியோர் வாழ்வுக்கு வழிகாட்டல், முதியோர் நிறை வாழ்வு, மங்கையர் நலன் காத்தல் போன்ற பல துறைகளிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது.

இவருக்கு 15 நிறுவனங்கள் பட்டங்களை வழங்கி உள்ளன. இலங்கை அரசும் இவருக்கு சமாதான

நீதிபதி, கலாசூரி, தொண்டு சீர்மாமணி ஆகிய கௌரவ பட்டங்களை வழங்கியுள்ளது.

இவரால் எழுதப்பட்ட நூல்கள, சொற்பொழிவுத் தொகுப்புக்களில் "கந்தபுராணச் சொற்பொழிவுகள்" 1978ல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது.

இத்தகைய இவரது சிறப்பாற்றல்களையும், அயராத உழைப்பையும் கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 1998ம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தினை வழங்கியது.

சேர் பொன்.இராமநாதன் சீமாட்டி லீலாவதி இராமநாதன் ஆகியோரின் வித்துக்களில் ஒன்றான "பெண் கல்வி" யின் விருட்சமாக கிளை பரப்பி நிழல் கொடுத்துக் கொண்டிருக்கும் பெண்மணி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இரண்டாயிரமாம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று அதனது 19 வது பட்டமளிப்பு வைபவத்தின் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை "சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்ககை நெறி" எனும் பொருளில் நிகழ்த்தினார் என்பது எத்தகைய ஒரு பொருத்தமான நிகழ்வு.

இவரது இந்தப் பேருரையானது கல்விமான்களுக்கு மட்டுமன்றி சாதாரண மக்களும் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறியை வடிவமைத்து நிற்பதனால் யாழ்.பல்கலைக்கழகம் இதனை நூல் வடிவில் அச்சேற்றி மகிழ்கின்றது.

A · B